**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 02-12-2022**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2022-12-02 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2022-12-03 | 2022-12-04 | 2022-12-05 | 2022-12-06 | 2022-12-07 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 6.0 | 8.0 | 4.0 | 3.0 | 4.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 31.0 | 30.0 | 30.0 | 29.0 | 29.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 23.0 | 23.0 | 22.0 | 22.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 70 | 60 | 70 | 60 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 14.0 | 12.0 | 12.0 | 14.0 | 18.0 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 70 | 70 | 20 | 340 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 8 | 5 | 6 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

| |
|---|
| அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை முதல் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது . அதிகபட்ச வெப்ப நிலை 30.0°C - 32.0°C, குறைந்தபட்ச வெப்ப நிலை 23.0°C - 25.0°C வேறுபாட்டிலும் இருக்கும். வானம் அடுத்த ஐந்து நாட்களுக்கு சிறிதளவு மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 12 - 18 கிலோமீட்டர் வேகத்தில் வடகிழக்கு திசையில் இருக்கும். |

## பொது ஆலோசனை:

| |
|---|
| விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : டிசம்பர்07 முதல் டிசம்பர் 13 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில் இயல்பிற்கு மேல் பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| மழை மற்றும் காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் நெல் பயிரைத் தாக்கும் குலை நோய்,இலைப் புள்ளி நோய், நெல்மணி நிறமாற்றம், போன்ற நோய் அறிகுறிகளை வயலில் கண்காணிக்க வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்போது நிலவும் பருவசூழ்நிலையில் நெற்பயிரில் கொம்புப்புழு தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதன் புழு நெற்பயிரின் இலை விளிம்புகளை ஒழுங்கற்ற முறையில் ஓரத்திலிருந்து நுனி வரை கடித்து உண்ணும். இதன் தாக்குதலை கட்டுப்படுத்த வயலில் நீரை வடிய செய்துவிட்டு, பின் மாலை வேலைகளில் ஒரு டேங்கிற்கு 6கிராம் என்ற |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | அளவில் இமாமெக்டின் பென்சோயேட் அல்லது ஒரு ஏக்கருக்கு 20மிலி என்ற அளவில் ப்ளூபென்டமைடு மருந்தினை தெளிக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னை இளம் பருவம் காய்ப்பதற்கு முன் மற்றும் காய்க்கும் பருவம் சிலந்திப் பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்த ஆசாடிராக்டின் 50% 7.5 மி.லி 7.5 மி.லி தண்ணீரில் கலந்து வேர் மூலம் செலுத்தவும். |
| வாழை | நிலவும் பருவச்சூச் ழ்நிலையில் வாழைப் பயிரில் பனாமா வாடல் நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. வாழையில் முதலில், அடிப்புற இலைகளில் குறிப்பாக இலை ஓரங்கள், மஞ்சள் நிறமாகி; வாடிக் காய்ந்துவிடும். தாக்குதல் அதிகரிக்கும் போது, மரத்தின் உச்சிச் இலைகள் விறைப்பாக மாறும். அடி இலைகள், இலைக்காம்புடன் ஒடிந்து தண்டைச் சுற்றி தொங்கும். நடும் போது ஆரோக்கியமான பக்கக் கன்றுகளை தேர்ந்ர் ந்தெடுக்கவும். பயிர் சுழற்சி முறையை கை யாளவும். நெல், கரும்பு பயிர்கர் ளை ஓரிருமுறையும் அதை த் தொடர்ந்ர் ந்து வாழையினை இரண்டு மூன்று முறையும் சுழற்சி முறையில் பயிர் செய்ய வேண்டும், சரியான உரம், நீர்ப்ர் ப்பாசனம் மற்றும் களைகட்டுட் ப்பாடு முறைகளை கை யாள வேண்டும். நல்ல வடிகால் அமைப்பை ஏற்படுத்தவும். ஒரு ஹெக்டருக்கு 2½ கிலோ என்ற அளவில் சூடோமோனாஸ் புளுரசன்ஸ் நுண்ணுயிர்க்ர் கொ க் ல்லியை தொழு உரம் மற்றும் வேப்பம் பிண்ணாக்குடன் கலந்து மண்ணில் இடவேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | செம்மறி ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோயானது டிசம்பர் மாதங்களில் அதன் தொடர்சசியாக பிப்ரவரி மாதம் வரையிலும் காணப்படும் . மழைக் காலங்களில் கொசுக்களின் உற்பத்தி அதிகமாக உள்ளதால் நோய் அதிகமாக பிரவுகிறது . நோயின் அறிகுறிகள் : அதிக காய்ச்சல் மற்றும் தீவனம் உண்ணாமல் சோர்ந்து காணப்படும் சிகிச்சை முறைகள் : நோய் கண்ட ஆடுகளுக்கு தனி கவனம் செலுத்தி கம்பு ,அரிசி ,கேழ்வரகு கஞ்சி போன்று நீர் ஆகாரமாக கொடுக்கப் பட வேண்டும் .நோய் கண்ட ஆடுகளை மேய்சலுக்கு அனுப்ப கூடாது . . ஆடுகளை டெல்டாமெத்ரின் ( 2 .மில்லி / 2 லி .தண்ணீர் ) மருந்து கலந்து நீரில் மூழ்கி எடுக்க வேண்டும் . நோய்ப் பாதித்த ஆடுகளுக்கு கால்நடை மருத்துவரைக் கொண்டு சிறப்பு சிகிக்சை அளிக்கப்பட வேண்டும் . |
| பசு | சினை மாடுகளை நன்கு பராமரிப்பதன் மூலம் நல்ல கன்றுகளை பெறுவதோடு பால் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கலாம். சினை மாடுகளுக்கு 1¼ கிலோவில்; இருந்து 1¾ கிலோ வரை கலப்புத் தீவனம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். நல்ல தரமான பயிறு வகைககளையும் தீவனமாக அளிக்கலாம். சினை மாடானது மிகவும் ஒல்லியாகவோ குண்டாகவோ இருத்தல் கூடாது. சூட்டிலிருந்து பாதுகாக்க தூய குளிர்ந்த நீரை குடிக்கவை க்கவும். சினை மாட்டுத் தொழுவத்தின் தரை வழுக்குமாறு இருக்கக் கூடாது. கடைசி 8 வார சினை தருணத்தில் கூடுதலாக 1 கிலேரி அடர் தீவனமும் தருதல் வேண்டும். கால்சியம் போன்ற தாதுக்களை கொடுக்க வேண்டும். |

## பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பொது ஆலோசனை | தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் தட்டை போன்ற கால்நடைத் தீவணப் பொருட்களில் அப்ளாடாக்ஸின் எனும் நச்சு பூஞ்சணவளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வகை நச்சுபூஞ்சணமானது கால்நடைகளின் ஆரோக்கியத்தினை பெரிதும் பாதிக்கும். ஆகையால் வைக்கோல் மற்றும் மக்காச்சோள தட்டைகளை வெயிலில் நன்கு உலர வைத்த பின்பு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளைப் பாதுகாக்கலாம். |